**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : STC.No.802/2022 |
| Deposition of Witness for | : PW – 2 |
| Name and Age | : சுருளிராஜன் (வயது 39) |
| Father / Husband Name | : கணேசன் |
| Occupation | : வனக்காப்பாளர் |
| Village | : பாலக்கோடு |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 15.04.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition filed U/s.355 BNSS filed and allowed.**

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

நானும், புகார்தாரர் மற்றும் எதிரி 2017ம் ஆண்டு அரசு தேர்விற்காக ஒன்றாக படித்துக்கொண்டிருந்தோம். 2018ம் ஆண்டு புகார்தாரர் என்னுடன் ஒன்றாக படிப்பதற்காக சேர்ந்துக்கொண்டார். அதன்பிறகு புகார்தாரர் மேல்படிப்பிற்காக சீனா சென்றார். சீனாவில் இருந்து புகார்தாரருக்கு கிடைத்த வருமானத்தை கொண்டு எதிரிக்கு பணம் அனுப்பினார். மேற்படி பணத்தை எதிரி சீட்டிற்கு கட்டினார். பணம் அனுப்பியதாகவும் அதற்கு சீட்டு கட்டுவதற்காக என்னையும் மூகாம்பிகா சிட்ஸ் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றார். மீண்டும் 2022ம் ஆண்டு நான் பணிமாற்றம் பாலக்கோட்டிற்கு பெற்று புகார்தாரருடன் தங்கும்போது புகார்தாரர் மனஉளைச்சலில் இருந்ததால் அவரை விசாரித்து எதிரியிடம் புகார்தாரர் பணம் கொடுத்த விசயத்தையும் அதை நம்பி தொழில் தொடங்குவதற்காக இருந்த விபரத்தையும் தெரிந்துக்கொண்டேன். இது சம்மந்தமாக எதிரியிடம் நான் தொலைபேசியில் கேட்டபோது எதிரி வங்கியில் கடன் வேண்டி விண்ணப்பம் செய்துள்ளதால் பணம் கிடைத்ததும் திருப்பி தருவதாக கூறினார். நான் பாலக்கோடு, இந்தியன் பேங்க் தரை தளத்தில் தங்கியுள்ளேன். 2024ம் ஆண்டு நான் கேட்டபோது எதிரி வங்கியில் கடன் பெற்று பணத்தை திருப்பி தருவதாக சொன்னார்.

**புகார்தாரர் தரப்பில் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

2018–ம் ஆண்டு நான் TNPSC படிப்பதற்காக வந்தேனா என்றால் சீனா

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.15 18:33:55 +0530

செல்வதற்காக வந்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்கள் புகார்தாரர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. புகார்தாரர் எதிரிக்கு சீட்டு கட்டுவதற்காக பணம் அனுப்பியதாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எதிரி சொல்லி தெரியும். புகார்தாரர் சீனாவில் இருந்து புகார்தாரருக்கு சீட்டு பணம் கட்டுவதற்காக பணம் அனுப்பியதாகவும் அதை கட்டுவதற்காக நானும் எதிரியுடன் உடன் சென்றேன் என்றால் சரிதான். எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு 2018ம் ஆண்டில் இருந்து பழக்கம். எதிரி எனக்கு 2017ம் ஆண்டில் இருந்தே தெரியும். புகார்தாரர் ஒன்றாக படிப்பதற்காக அறிமுகம் ஆனார். எனக்கு எதிரி மற்றும் புகார்தாருக்கும் இடையே ஏற்பட்ட பணப்பரிவர்தனை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.15 18:34:00 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | STC.No.802/2022 |
| Deposition of Witness for | : | PW – 3 |
| Name and Age | : | மகேந்திரன் (வயது 40) |
| Father / Husband Name | : | தேவன் |
| Occupation | : | தலைமை ஆசிரியர், சுவாமி தயானந்த வித்யாஸ்ரம் பள்ளி |
| Village | : | ஆமேதனஹள்ளி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 15.04.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition filed U/s.355 BNSS filed and allowed.**

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை**

எதிரி எனக்கு 2011ல் இருந்தே பழக்கம். இந்தியன் பேங்க் மேலே உள்ள குருகுலம் பயிற்சி பள்ளியாக இருந்த இடத்தை அதன்பிறகு பயிற்சி பள்ளி மூடியதால் அந்த இடத்தை நாங்கள் படிப்பதற்காகவும் தங்குவதற்காகவும் பயன்படுத்தினோம். புகார்தாரர் 2018ம் ஆண்டு எனக்கு அறிமுகமானார். மாதம் நினைவில்லை 2018 ஜீன் முதல் டிசம்பர் மாதம் வரை புகார்தாரர் மேற்படி அறையில் தங்கினார். அதன்பிறகு புகார்தாரர் மேற்படிப்பிற்காக சீனா சென்றுவிட்டார். அதன்பிறகு புகார்தாரருடன் எனக்கு தொடர்பு இல்லை. எதிரி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பழக்கத்தில் இருந்தார். புகார்தாரரின் வருமானத்தில் ஒரு தொகையை எதிரிக்கு கொடுத்ததாக 2019ம் ஆண்டு தொடக்கத்தில் எதிரி என்னிடம் சொன்னார். மாதம் நினைவில்லை 2019ம் ஆண்டு புகார்தாரர் இந்தியா வந்தார் மீண்டும் சீனா சென்றுவிட்டார். மீண்டும் பணம் புகார்தாரர் அனுப்பியதாக கோவிந்தராஜ் என்னிடம் சொன்னார். மேற்படி பணத்தை வைத்து சீட்டு கட்டுவதாக எதிரி என்னிடம் சொன்னார். சீட்டு கட்டினாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. சீனா சென்றபிறகு எதிரி நடவடிக்கை செல்வாக்காக இருந்தது. ஆண்டு நினைவில்லை கோவிட்க்கு முன்பாக மார்ச் மாதம் எதிரி புகார்தாரர் அனுப்பிய சீட்டு பணத்தை கட்டவில்லை என நேரடியாகவும், தொலைபேசி மூலமும் கூறினார். நான் எதிரியிடம் கேட்டபோது திருப்பி செலுத்துவதாக எதிரி கூறினார். புகார்தாரர் மேற்படி பணத்தை வைத்து தொழில் தொடங்குவதாக கூறினார். மேற்படி நாங்கள் தங்கி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.15 18:34:07 +0530

படித்த அறைக்கு சரவணன் மற்றும் ஆம்ஸ்ட்ராங்க்பாண்டியன் 2018ம் ஆண்டிற்கான கட்டணம் செலுத்தினார்கள். மேற்படி அறைக்கு சீனா செல்வதற்காக தங்கினார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு 40 வயது ஆகிறது. 2025 நவம்பர் மாதத்தில் இருந்து தலைமை ஆசிரியராக உள்ளேன். இதற்கு முன்பு சி.எஸ்.ஐ. தொடக்கபள்ளியில் ஆசிரியராக பணியாற்றினேன். எதிரி எனக்கு சரவணம் மூலமாக 2011ம் ஆண்டில் இருந்து பழக்கம். நான் அரசு தேர்விற்கு படிப்பதற்காக பாலக்கோடு GTC குருகுலம் பயிற்சி பள்ளியில் படிக்க கோவிந்தராஜ் மற்றும் சரவணன் மூலமாக வந்தேன். பொதுவாக பயிற்சி பள்ளியில் படிப்பதற்காக தான் வருவார்கள் என்றால் புகார்தாரரை தவிர்த்து மற்றவர்கள் படிக்க வந்தார்கள். 2018 மே மாதத்தில் இருந்து ஆறு மாதங்கள் பயிற்சி பள்ளியிலேயே தங்கி படித்தேன். எந்த ஆண்டு புகார்தாரர் சீனா சென்றார் என்றால் 2018ம் ஆண்டு சென்றார் மாதம் நினைவில்லை. சீனா சென்றபிறகு புகார்தாரர் எதிரியிடம் தொலைபேசியில் அதிகமாக பேசினார் என்றால் சரிதான். புகார்தாரர் எதிரிக்கு கொடுத்த தொகை எவ்வளவு என்றால் மாதம் மாதம் அனுப்பியதாக சொன்னார். மேற்படி பணம் புகார்தாரரின் பெயரில் சீட்டு கட்டுவதற்காக தான் அனுப்பப்பட்டதாக எதிரி கூறினார் என்றால் சீட்டு கட்டுவதாக சொன்னார் யார் பெயரில் கட்டுவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. எதிரி புகார்தாரரின் பெயரில் தான் சீட்டு கட்ட பணம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் பெயரில் சீட்டு கட்டவில்லை என எனக்கு கோவிந்தராஜ் மோகன்ராஜ் ஆகீயோர் சொல்லி தெரியும். புகார்தாரர் எந்த தேதியில் மார்ச் மாதம் 2019ம் ஆண்டு சீனாவில் இருந்து இந்தியா வந்தார். அதன்பிறகு புகார்தாரர் எதிரியிடம் சென்று பணத்தை திருப்பி கேட்டு தராததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கொடுக்கல் வாங்கலால் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.15 18:34:12 +0530

Judicial Magistrate,
Palacode.